# மனத்திரையில்!

(1975-ஆம் ஆண்டு மெரினாவிலுள்ளசென்னை பல்கலைக்கழக பி.ஜி. விடுதியில் எழுதியது)

## பகுதி - 1

அன்றொரு நாள் -

காவிரிப் பூம்பட்டிணத்துக் கடற்கரையில்

நான் கண்ட காட்சி

இன்னமும் கண்முன்னே

அப்படியே நிற்கிறது!

இன்று நிகழ்ந்ததுபோல்

பசுமை குன்றாமல் திகழ்கின்றது!

காவெல்லாம் விரிந்து வரும்காவிரி

கடலோடு கலக்கும் இடம் - வங்கக்

கடலின் தங்கக் கடற்கரையோரம்
செங்கதிரோன் மேற்றிசையில்

மறைகின்ற மாலைநேரம்.

நெஞ்சுக் கூட்டுக்குள்ளே இதயத்தையும்
ஆட்டுகின்ற குளிர்இருந்தது வீசிய
கடற்காற்றில்!

இடையறாது ஒலித்திடும் அலைகளின்

ஓவெனும் இரைச்சல் கேட்டது காதில்!

கரையினைத் தொடுவதும் பின்பு

ஓடி ஒளிவதுமாய் விளையாடிடும்

அலைகள் புரண்டன காலில்!

பகல் முழுதும் பார்மீது

பாய்ந்திருந்த ஒளிவெள்ளம் வடிந்து

மெல்ல மெல்ல இருள்

கவிந்து வரும் நேரத்திலே

தங்கச் சிலையென ஒரு மங்கை

தனித்து வீற்றிருந்தாள் கடல் ஓரத்திலே!

இளமை ஈந்த அழகெல்லாம்

இடம் கொண்டிருந்தது

அவள் தளிர் உடலினிலே !

பாவையவள் பார்வையெல்லாம்

நிலை கொண்டிருந்தது

எதிர் இருந்த கடலினிலே!

யாருடைய வரவினையோ எதிர்பார்த்து

வருகின்ற வழியினையே விழிபார்த்துக்

காரிகையும் காத்திருந்தாள்

மணற்பரப்பில் அமர்நத வண்ணம்

எண்ணமதை எங்கெங்கோ ஓடவிட்டு!

அலைகடலை உற்று நோக்குகின்ற

ஆரணங்கின் மனத்தினிலும்

அலைகடலின் கொந்தளிப்பு

வைத்த விழி வாங்காமல்

பொங்குகின்ற ஆழியினை நோக்குகின்றாள்
நேரிழையும்

போராடும் நெஞ்சோடு!- அப்போது-

தொலைவினிலே கடல் நடுவினிலே

காளையொருவன் தனித்துச்

செலுத்திவந்த கலத்தினையும்

கண்டிடுகின்றாள் - காளையவன்

யாரென அறிய ஆவல் மிகக்

கொண்டிருகின்றாள்.

சற்று முன்னர் தூரத்தே அவள்

கண்டகலம் வெகுசீக்கிரத்தில்

கரையருகே நெருங்கிவரக்

காரிகையும் கூர்ந்து நோக்குகின்றாள்

கூரிய தன் விழிகளாலே!

கரைநோக்கி வரும் கலம் நோக்கிடக்

கோதையவள் கண்களிலே ஒளிவெள்ளம்!

தோகையவள் முகத்தினிலோ

கரைகாணா மகிழ்ச்சி வெள்ளம்!

காரிகையின் களிப்புக்கும்

காரணம் உண்டு !

கரைநோக்கி விரைந்தேகும் கலத்தினைச்

செலுத்திவந்த கட்டழகன்-

காரிகையின் கட்டுடலைத்

தொட்டுத் தாலிகட்டி — நீள்கழுத்தில்

மாலையிட்டு — அவளைக் கைப்பிடிதத

காளையாவான் !

காளையவன் கலத்தினையும்

கரையினுக்குச் செலுத்திவந்து

கடலினிலே பிடித்து வந்த மீனோடு

இறங்குகின்றான் - ஆரணங்கும்

அவனை நோக்கி ஓடுகின்றாள் ஆவலோடு!

நீரினின்று கலத்தினையும் நிலத்தினுக்கு

இழுத்து வந்து நிறுத்திவிட்டு —

மீன் நிறைந்த கூடையையும் வலையினையும்

எடுத்து வந்து பாவையவள் முன்னர்

வீற்றிருந்த இடத்தினிலே அமர்கின்றான்.

பூரிப்பால் பொங்குகின்ற உள்ளத்துடன்

பூவையுமே சென்று — தன் உள்ளத்தைக் -

கொள்ளை கொண்ட

தலைவன் முன்னே அமர்ந்து கொண்டாள்.

தன்னைக் கொண்டவனைத் தன்

கண்ணெதிரில் கண்டபின்தான்

அலைகடலாய்க் கொந்தளித்த

அவள் மனமும் அமைதியினைக்
கண்டுள்ளது

நெஞ்சிலே நிறைந்திட்ட நிம்மதியில்

நெட்டுயிர்த்தாள் கொஞ்சம் முன்னர்வரை

அலைமோதும் நெஞ்சினளாய்த்

தவித்திட்ட பாவை!

கீழ்வானில் இளம்பரிதி தோன்றாத

இளங்காலைப் பொழுதினிலே

இன்பத்தின் ஊற்றான இனியவளைப்

பிரிந்து தனித்துச் சென்றிட்டான்

உடல் உழைப்பால் பொருள்குவிக்க

நடுக் கடலினுக்கே!

நாள் முழுதும் ஆழ்கடலில்

ஆள் உயர அலைகளிடைப் போராடி

கலத்தினையே விழுங்கும் வண்ணம்

எழுகின்ற கடலலையில் நீராடி

சுட்டெரிக்கும் கதிரவனின் வெம்மையாலே

மேனியெல்லாம் நீரோடி

உடல் ஓயப் பாடுபட்டு

பகற்பொழுது முடியும் வேளையிலே

திரும்பியுள்ளான் விடியும் முன்பே

புறப்பட்டுப் போன இளையோனும்!

ஆபத்தெதுவுமின்றி உயிர்பிழைத்து

வந்துவிட்டான் நாயகனும் !

அவனையவள் விட்டுப் பிரிந்ததுமுதல்

ஆயிரம்முறை செத்துப்பிழைத்து விட்டாள
நாயகியும்

தங்கத் தேர் போன்ற மேனிகொண்ட

மங்கையவள் தன் தங்கக் கரத்தாலே

தன்னுயிரில் பாதியெனும் தலைவனுக்கு

நிலவு கண்டு மலர்கின்ற குமுதம்போல்

முகம் மலர்ந்தே அமுது படைகின்றாள்

அன்னவனும் அன்னமவள் அன்னமிடும்

அழகினிலே அகமகிழ்ந்து

அரும்பசியைப் போக்குகின்றான்

பாவையவள் கொணர்ந்திருந்த நீர் பருகித்

தாகத்தினைத் தீர்க்கின்றான்

பசித்து அழும் சேயினுக்குப்

பாலூட்டும் தாயினைப் போல் தையலுமே

தன் கைத்தலம் பற்றிய
தலைவனுக்குப்பரிவுடனே

மீண்டும் மீண்டும் தட்டினிலே உணவுஇட்டு

அவனை வேண்டும் மட்டும் உண்ணவைத்து

அவன் புசித்திடும் அழகினை

ரசித்திடுகின்றாள் - மனத்திலே

இன்பந்தனை ருசித்திடுகின்றாள் !

அன்று காவிரிப் பீம்பட்டிணத்துக்

கடற்கரையில் நான் கண்டகாட்சி இதுவே !

மனத்திரையில் அழியாத சித்திரமாய்

ஆழப்பதிந்து விட்ட இனிதான காட்சியிது
என்பேன்.

## பகுதி — 2

கரையினுக்குத் திரும்புகின்ற கணவனையும்

உணவுடனே சென்று வரவேற்று

அவன் போதும் எனும் மட்டும்

அன்போடு அமுதிட்டு

ஆரணங்கும் அகம் மகிழ்ந்த

அழகுக் காட்சியினை நேரில்

நான் கண்டபோது —

என் நெஞ்சினிலே எழுந்த எண்ணங்கள்
எத்தனையோ உண்டு

அவை அத்தனையும் சொல்லில் நீளும் -
எனவே முத்தனைய

எண்ணம் ஒன்று மட்டும் சொல்வேன் -கேளீர்!

மனைவாழ்வின் மாட்சியினை

இக்காட்சியிலே கண்டேன்!

மணவாழ்வின் மாண்பினையும்

இல்வாழ்வின் சிறப்பினையும் உணர்ந்தேன்!

ஒரு ஆடவனின் வாழ்க்கை முழுமைபெற —
வாழ்வு நிறைவுபெற

அவன் வாழ்வினிலே பெண்ணொருத்தி

இடம் பெறல் வேண்டும்!

பெண் இனத்திண் வாசனையே அறியாது
வாழ்தலினால் என்ன லாபம்?

எனவே எந்த ஒரு ஆண்மகனின்
வாழ்வினிலும் பெண் ஒருத்தி வரல் வேண்டும்

ஒரு ஆடவனின் வாழ்வினிலே அவ்வாறு

வருகின்ற வஞ்சியவள் எந்நிலையில்

வரவேண்டும் என்பதுதான் கேள்வி!

அக்கேள்விக்குத் தக்கபதிலாக
அமைந்ததுதான்

அன்று காவிரிப் பூம்பட்டினத்துக்
கடற்கரையில் நான் கண்ட காட்சி!

கானளயொருவன் வாழ்வினிலே வருகின்ற
மங்கையவள்

மனைவி என்ற நிலையினிலே வரவேண்டும்!

அவ்வாறின்றி ஆசை நாயகியாய்
விலைமகளாய் இடம்பெற்றால்

இவ்வஞ்சியரின் குறுக்கீட்டால் முடிவினிலே